Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 140/2026** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **விஜயகுமார் (சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**15.06.2026**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது விருதுநகர் மேற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 01.03.2026ம் தேதி நான் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது நான் மற்றும் முதல் நிலை காவலர்கள் பெரியதம்பி, முத்துக்குமார் ஆகியோர்களுடன் அருப்புக்கோட்டை நகரில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து அருப்புக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் வெள்ளை நிற சாக்கு பையுடன் நின்று கொண்டிருந்தவரை விசாரிக்க அவரது பெயர் குணசேகரன் என்று கூறியவர் வைத்திருந்த சாக்குபையை சோதனை செய்ததில் அரசு முத்திரையுடன் கூடிய சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS BRANDY – 28 பாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி பாட்டில்கள் பற்றி அந்த நபரிடம் நான் விசாரித்தபோது விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். எந்தவொரு அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் அதிக லாப நோக்கத்துடன் மதுபாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக அந்த

இடத்திலேயே அந்த நபரை கைதுக்கான காரணத்தை கூறி காலை 11.00 மணிக்கு கைது செய்தேன். அந்த நபர் வைத்திருந்த மது பாட்டில்கள், மற்றும் மேற்படி பாட்டில்களை வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பை ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றி அதில் கையெழுத்திட அங்கிருந்த தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் வந்த காவலர் சாட்சிகள் முன்னிலையில் காலை 11.15 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி அதில் முநிகா பெரியதம்பி, முத்துக்குமார் ஆகியோர்களிடம் கையெழுத்து பெற்றேன்.

**3.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரி மற்றும் சொத்துக்களுடன் 11.45 மணிக்கு அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையம் வந்து குணசேகரன் என்பவர் மீது நிலைய குற்ற எண். 116/2026 பிரிவுகள் 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கையையும் அசல் அத்தாட்சியையும் கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

4. பின்னர் எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் அன்றைய தினமே என்னுடன் ரோந்து பணிக்கு சென்ற சாட்சிகளான முநிகா பெரியதம்பி, முத்துக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் 10.03.2026 ம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றபட்ட சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS BRANDY – 28 மதுபாட்டில்கள் வைத்திருந்த சாக்கு பையை ஆகியவற்றை உதவி ஆணையர் (Excise Departement, Virudhunagar) அவர்களிடம் ஒப்படைத்து ந.க.க.எண். 2/20.01.2025 ன்படி மேற்படி பாட்டில்களை அழித்தற்கான சான்றினை பெற்றேன். **(அழித்தல் சான்று அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**6**. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி குணசேகரன் என்பவர் மீது பிரிவு 4(1)(C) TNP Act (Amendment) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** இவ்வழக்கில் நான் தான் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். சம்பவ இடமானது பொது மக்கள் அதிகம் கூடும் இடம் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பாட்டில்களில் மதுபானங்கள் தான் இருந்தது என்பதை நிரூபணம் செய்ய மேற்படி பாட்டில்களை பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்ற காரணத்தினால் தான் பொதுமக்கள் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல.

2. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தான் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி என்ற காரணத்தினால் இவ்வழக்கானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு இருந்தால் அவற்றை நான் வீடியோ பதிவு செய்திருப்பேன் என்றாலும் சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தில் தான் வீடியோ பதிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**